**சுருக்கம்**

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – திரு.ட்டி.ஆர்.அறம் உள்ளிட்ட 5 உதவி செயற்பொறியாளர்கள் சார்பாக தமிழ்நாடு பஞ்சாயத்து வளர்ச்சிப் பணியில் தற்காலிகப் பணி விதிகளின், விதி 4 (2)ல் செயற்பொறியாளர் பதவிக்கு வரையறுக்கப்பட்ட பணித்தகுதியை தளர்வு செய்து 2008–09ம் ஆண்டுக்கான செயற்பொறியாளர் கூடுதல் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிடுதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பஅ3) துறை

அரசாணை (ப) எண்.415 நாள் 1.7.2009

படிக்கப்பட்டவை

1.அரசாணை (ப) எண்.612, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பஅ3) துறை, நாள் 12.8.2008.
2.அரசாணை (ப) எண்.367, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பஅ3) துறை, நாள் 17.6.2009.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் எண்.50576/08/இஇ1, நாள் 30.6.09.

**ஆணை**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2008–09ம் ஆண்டுக்கான செயற்பொறியாளர் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலுக்கு ஏற்பளித்து ஆணைகள் வெளியிடப்பட்டன. இப்பட்டியலில் 12 உதவி செயற்பொறியாளர்களின் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இப்பன்னிரண்டு உதவி செயற்பொறியாளர்களில், தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்பட்ட நாளுக்குப் பின்னர் 5 உதவி செயற்பொறியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகளில் வழங்கப்பட்ட தண்டனை அல்லது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின், விதி 17 (பி)ல் தொடரப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிலுவை ஆகிய உள்ள காரணத்தால் அவர்களின் பெயர்களை தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலிலிருந்து நீக்கம் செய்து, மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது.

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், 2008–09ம் ஆண்டுக்கான செயற்பொறியாளர் பதவிக்கான தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலிலிருந்து நீக்கம் செய்யப்பட்ட 5 உதவி செயற்பொறியாளர்களின் பெயர்களுக்குப் பதிலாக 8 உதவி செயற்பொறியாளர்களின் பெயர்ப் பட்டியலை கூடுதல் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் தயாரிப்பதற்கு அரசிற்கு அனுப்பிவைத்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் செயற்குறிப்பினை அரசு விரிவாக ஆய்வு செய்தது. செயற்பொறியாளர் பணியிடத்திற்கான தற்காலிக பணி விதிகளின்படி முன் தகுதியாக, தகுதி, பணிமூப்பு, துறைத்தேர்வு இவற்றிற்கிடையில் உதவி செயற்பொறியாளராக (ஊ.வ.) 5 ஆண்டுகள் பணித்தகுதி தேவை என்று வரையறுக்கப்பட்டுள்ளது. தற்போது பதவியுயர்வுக்குப் பிற தகுதிகள் பெற்று முதுநிலையில் உள்ள 5 உதவி செயற்பொறியாளர்கள் பணித்தகுதியினை (Service qualification) நிறைவு செய்யாததால் இந்த 5 உதவி செயற்பொறியாளர்கள் பொருட்டு தமிழ்நாடு பஞ்சாயத்து வளர்ச்சிப் பணியின் தற்காலிகப் பணிவிதிகளில், விதி 4(2)ஐ தளர்த்தி ஆணையிடலாம் என அரசு முடிவு செய்துள்ளது.

4. அவ்வாறே 1997ம் ஆண்டு தமிழ்நாடு பணிகள் நடைமுறை நூலின் முதல் தொகுதியில் பகுதி இரண்டில் உள்ள தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில்,

விதி 48ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள திரு.ட்டி.ஆர்.அறம் உள்ளிட்ட 5 உதவி செயற்பொறியாளர்களின் பொருட்டு செயற்பொறியாளர் பதவி உயர்விற்கு, உதவி செயற்பொறியாளராக 5 ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற பணித்தகுதி தொடர்பான தமிழ்நாடு பஞ்சாயத்து வளர்ச்சிப் பணியின் தற்காலிக பணிவிதிகளில் செயற்பொறியாளர்களுக்கான விதி 4 (2)ஐ தளர்த்தி தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் ஆணையிடப்படுகிறது.

5. மேலும் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளின் பொது விதிகளில், விதி 4ன் கீழ் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையினை அரசு ஆய்வு செய்து 2008–09ம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் காலிப்பணியிட மதிப்பீடு நிர்ணயிக்கப்பட்ட 12 செயற்பொறியாளர் பணியிடங்களுக்கு பதவி உயர்வு அளிக்கும்பொருட்டு தமிழ்நாடு ஆளுநரால் பணித்தகுதியிலிருந்து விலக்கு அளித்து ஆணையிடப்பட்டுள்ள இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள திரு.ட்டி.ஆர்.அறம் உள்ளிட்ட 5 உதவி செயற்பொறியாளர்களின் கூடுதல் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலினை அரசு வெளியிடுகிறது.

6. இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள 5 உதவி செயற்பொறியாளர்களை செயற்பொறியாளர் பணியிடத்தில் காலியாக உள்ள பணியிடங்களின் எண்ணிக்கைக்குட்பட்டு தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலின் அடிப்படையில் செயற்பொறியாளர்களாகப் பதவி உயர்வு அளித்து அரசு ஆணையிடுகிறது. செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்ட உதவி செயற்பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் பணியிடத்தில் காலிப்பணியிடங்கள் இல்லாத நிலையில், எந்தவித முன்னறிவிப்பும் இன்றி உதவி செயற்பொறியாளர்களாக பதவியிறக்கம் செய்யப்படுவார்கள் என்றும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
சம்மந்தப்பட்ட அலுவலர்கள்
(வழி – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
சம்பளம் மற்றும் கணக்குகள் துறை இயக்குநர், சென்னை–15
சம்மந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்
மாநில கணக்காயர், சென்னை–18 (கணக்கு / தணிக்கை)

நகல்
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
முதன்மைச் செயலரின் தனிச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## பிற்சேர்க்கை

## தமிழ்நாடு பஞ்சாயத்து வளர்ச்சிப் பணியின் தற்காலிக பணி விதிகளில் செயற்பொறியாளர்களுக்கான விதி 4(2)ஐ தளர்வு செய்து 2008–09ம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பணியிடங்களுக்கு பதவி உயர்வு அளிப்பதற்கான தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல்

| வ.எண் | பெயர் திருவாளர்கள்/ திருமதி | ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் ஆணையரின் பணிமூப்பு பட்டியல் எண் | த.நா.அரசுப் பணியாளர் தேர்வாணைய பணிமூப்பு பட்டியல் எண் | உ.செ.பொ (ஊவ) ஆக பணியில் சேர்ந்த தேதி |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | ட்டி.ஆர்.அறம் | 15 | 34 | 27.2.2006 |
| 2 | எ.வெண்ணிலா | 16 | 38 | 7.7.2006 |
| 3 | ஆர்.வெங்கடேஸ்வரன் | 17 | 40 | 2.3.2006 |
| 4 | எஸ்.பாலகிருஷ்ணன் | 19 | 50 | 27.2.2006 |
| 5 | கே.செந்தில்குமார் | 20 | 52 | 8.3.2006 |

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

ஊரகக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ3)
துறை, தலைமை செயலகம்,
சென்னை–9
தொலைப்பேசி 044–25670769
044–25675692
நிகரி 044–25675849
இணையதளம் www.tnrd.gov.in

**கடித எண்.21287/இ3/2009, நாள் 1.7.2009.**

அனுப்புநர்
திரு.க.அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப.
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஆர்.ரமேஷ்,
உதவி செயற்பொறியாளர்,
கடலூர் மாவட்டம்.
(வழி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15)

அய்யா,

பொருள் பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் தகுதியுடைய உதவி செயற்பொறியாளர்களுக்கு பதவி உயர்வில் 2008–09ம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவிக்கான கூடுதல் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் சேர்க்கப்படாத நபர் – விவரம் தெரிவித்தல்

பார்வை
1. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் எண்.50576/08/இஇ1, நாள் 30.6.09.
2. அரசாணை (ப) எண்.415, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பஅ3) துறை, நாள் 1.7.2009.

-----

2008–09ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவிக்கான காலிப்பணியிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து பார்வை 2ல் காணும் அரசாணையில் 2008–09ஆம் ஆண்டிற்குரிய செயற்பொறியாளர் பதவிக்கான கூடுதல் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டது. அப்பட்டியலில் தங்களுடைய பெயர் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டபோது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்கள் நடவடிக்கை எண்.90686/08/DPC 2.1, நாள் 26.6.09ல் தங்களுக்கு வழங்கப்பட்ட ‘கண்டனம்’ எனும் தண்டனை நடப்பில் உள்ள காரணத்தினால் அந்த கூடுதல் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் தங்களின் பெயர் சேர்க்கப்படவில்லை (Passed over) என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக

நகல்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15
மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர்.

## சுருக்கம்

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – திரு.ட்டி.ஆர்.அறம் உள்ளிட்ட 5 உதவி செயற்பொறியாளர்கள் சார்பாக தமிழ்நாடு பஞ்சாயத்து வளர்ச்சிப் பணியில் தற்காலிக பணி விதிகளின், விதி 4 (2)ல் செயற்பொறியாளர் பதவிக்கு வரையறுக்கப்பட்ட பணித்தகுதியை தளர்வு செய்து 2008–09ம் ஆண்டுக்கான செயற்பொறியாளர் கூடுதல் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிடுதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பஅ3) துறை

அரசாணை (ப) எண். நாள்

படிக்கப்பட்டவை

1.அரசாணை (ப) எண்.612, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பஅ3) துறை, நாள் 12.8.2008.
2.அரசாணை (ப) எண்.367, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பஅ3) துறை, நாள் 17.6.2009.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் எண்.50576/08/இஇ1, நாள் 30.6.09.

**ஆணை**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2008–09ம் ஆண்டுக்கு செயற்பொறியாளர் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலுக்கு ஏற்பளித்து ஆணைகள் வெளியிடப்பட்டன. இப்பட்டியலில் 12 உதவி செயற்பொறியாளர்களின் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இப்பன்னிரண்டு உதவி செயற்பொறியாளர்களில் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்பட்ட நாளுக்குப் பின்னர் 5 உதவி செயற்பொறியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகளில் வழங்கப்பட்ட தண்டனை அல்லது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின், விதி 17 (பி)ல் தொடரப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிலுவையில் உள்ள காரணத்தால் அவர்களின் பெயர்களை தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலிலிருந்து நீக்கம் செய்து, மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது.

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், நீக்கம் செய்யப்பட்ட 5 உதவி செயற்பொறியாளர்களுக்கு பதிலாக 8 உதவி செயற்பொறியாளர் பெயர்ப் பட்டியலை கூடுதல் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் தயாரிப்பதற்கு அரசிற்கு அனுப்பிவைத்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் செயற்குறிப்பினை அரசு விரிவாக ஆய்வு செய்தது. செயற்பொறியாளர் பணியிடத்திற்கான தற்காலிக பணி விதிகளின்படி முன் தகுதியாக, தகுதி, பணிமூப்பு, துறைத்தேர்வு இவற்றிற்கிடையில் உதவி செயற்பொறியாளராக (ஊ.வ.) 5 ஆண்டுகள் பணித்தகுதி தேவை என்று வரையறுக்கப்பட்டுள்ளது. தற்போது முதுநிலையில் உள்ள 5 உதவி செயற்பொறியாளர்கள் மேற்குறிப்பிட்டுள்ள தகுதிகளில், பணித்தகுதியினை (Service qualification) நிறைவு செய்யாததால் இந்த 5 உதவி செயற்பொறியாளர்கள் பொருட்டு தமிழ்நாடு பஞ்சாயத்து வளர்ச்சிப் பணியின் தற்காலிகப் பணிவிதிகளில், விதி 4(2)ஐ தளர்த்தி ஆணையிடலாம் என அரசு முடிவு செய்துள்ளது.

4. அவ்வாறே 1997ம் ஆண்டு தமிழ்நாடு பணிகள் நடைமுறை நூலின் முதல் தொகுதியில் பகுதி இரண்டில் உள்ள தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில், விதி 48ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள திரு.ட்டி.ஆர்.அறம் உள்ளிட்ட 5 உதவி செயற்பொறியாளர்களின் பொருட்டு செயற்பொறியாளர் பதவி உயர்விற்கு, உதவி செயற்பொறியாளராக 5 ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற பணித்தகுதி தொடர்பான தமிழ்நாடு பஞ்சாயத்து வளர்ச்சிப் பணியின் தற்காலிக பணிவிதிகளில் செயற்பொறியாளர்களுக்கான விதி 4 (2)ஐ தளர்த்தி தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் ஆணையிடப்படுகிறது.

5. மேலும் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளின் பொது விதிகளில், விதி 4ன் கீழ் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையினை அரசு ஆய்வு செய்து 2008–09ம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் மதிப்பீடு நிர்ணயிக்கப்பட்ட 12 செயற்பொறியாளர் பணியிடங்களுக்கு பதவி உயர்வு அளிக்கும்பொருட்டு தமிழ்நாடு ஆளுநரால் பணித்தகுதியிலிருந்து விலக்கு அளித்து ஆணையிடப்பட்டுள்ள இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள திரு.ட்டி.ஆர்.அறம் உள்ளிட்ட 5 உதவி செயற்பொறியாளர்களின் கூடுதல் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலினை அரசு வெளியிடுகிறது.

6. இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள 5 உதவி செயற்பொறியாளர்களை செயற்பொறியாளர் பணியிடத்தில் காலியாக உள்ள பணியிடங்களின் எண்ணிக்கைக்குட்பட்டு

தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலின் அடிப்படையில் செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு அளித்து அரசு ஆணையிடுகிறது. செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்ட உதவி செயற்பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் பணியிடத்தில் காலிப்பணியிடங்கள் இல்லாத நிலையில், எந்தவித முன்னறிவிப்பும் இன்றி உதவி செயற்பொறியாளர்களாக பதவியிறக்கம் செய்யப்படுவார்கள் என்றும் அரசு ஆணையிடுகிறது.

பெறுநர்
சம்மந்தப்பட்ட அலுவலர்கள்
(வழி – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
சம்பளம் மற்றும் கணக்குகள் துறை இயக்குநர், சென்னை–15
சம்மந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்
மாநில கணக்காயர், சென்னை–18 (கணக்கு / தணிக்கை)

நகல்
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
முதன்மைச் செயலரின் தனிச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9

ஊரகக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ3)
துறை, தலைமை செயலகம்,
சென்னை–9
தொலைப்பேசி 044–25670769
044–25675692
நிகரி 044–25675849
இணையதளம் www.tnrd.gov.in

**கடித எண்.12592/இ3/2009, நாள் 23.6.2009.**

அனுப்புநர்
திரு.க.அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப.
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஆர்.ரமேஷ்,
உதவி செயற்பொறியாளர்,
கடலூர் மாவட்டம்.
(வழி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15)

அய்யா,

| | |
|---|---|
| பொருள் | பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் தகுதியுடைய உதவி செயற்பொறியாளர்களுக்கு பதவி உயர்வில் 2008–09ம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவிக்கான தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் சேர்க்கப்படாத நபர்கள் – விவரம் தெரிவித்தல். |
| பார்வை | 1. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் எண்.50576/08/இஇ1, நாள் 30.6.09.<br>2. அரசாணை (ப) எண்.415, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பஅ3) துறை, நாள் 1.7.2009. |

–––––

2008–09ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவிக்கான காலிப்பணியிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து பார்வை 2ல் காணும் அரசாணையில் 2008–09ஆம் ஆண்டிற்குரிய செயற்பொறியாளர் பதவிக்கான கூடுதல் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டது. அப்பட்டியலில் தங்களுடைய பெயர் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டபோது தங்கள் மீது வழங்கப்பட்ட ‘கண்டனம்’ எனும் தண்டனை நடப்பில் உள்ள காரணத்தினால் அந்த கூடுதல் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் தங்களின் பெயர் சேர்க்கப்படவில்லை (Passed over) என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

த.உ

நகல்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15
மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர்.

| | | |
|---|---|---|
| 4 | கே.ரவிசங்கர் | மந்தன அறிக்கையில் குறை குறிப்புரைகள் (Adverse remarks) நிலுவை |
| 5 | கே.என்.தரணி | தகுதிகாண் பருவம் முடிக்கவில்லை |
| 6 | கே.ப்பி.தேவகிருஷ்ணன் | தகுதிகாண் பருவம் முடிக்கவில்லை |
| 9 | வி.ப்பி.கந்தசாமி | தகுதிகாண் பருவம் முடிக்கவில்லை |
| 10 | எஸ்.சாமிநாதன் | 17 (b) குற்றச்சாட்டு நிலுவை |
| 11 | ப்பி.ரவிக்குமார் | மந்தன அறிக்கையில் குறை குறிப்புரைகள் (Adverse remarks) நிலுவை |
| 12 | கே.நடராஜன் | 17 (b) குற்றச்சாட்டு நிலுவை |
| 13 | ஆர்.மனோகரன் | 17 (b) குற்றச்சாட்டு நிலுவை (ம) துறைத் தேர்வு முடிக்கவில்லை |
| 14 | ஜி.தங்கராஜ் | 17 (b) குற்றச்சாட்டு நிலுவை |
| 15 | யு.அப்துல் ரகுமான் | 17 (b) குற்றச்சாட்டு நிலுவை |
| 16 | ஆர்.சுபாஷ் சந்திர போஸ் | தண்டனை நடப்பில் உள்ளது |
| 17 | ட்டி.எம்.குமார் | தண்டனை நடப்பில் உள்ளது |
| 18 | எஸ்.செழியன் | 17 (b) குற்றச்சாட்டு நிலுவை |
| 19 | எஸ்.திருநாவுக்கரசு | 17 (b) குற்றச்சாட்டு நிலுவை |
| 20 | கே.பாலசுப்ரமணியம் | தண்டனை மற்றும் 17 (b) குற்றச்சாட்டு நிலுவை |
| 21 | கே.மணி | 17 (b) குற்றச்சாட்டு நிலுவை |
| 22 | ஆர.கலைச்சாமி | 17 (b) குற்றச்சாட்டு நிலுவை |
| 23 | எஸ்.பெருமாள் | துறைத் தேர்வு தேர்ச்சி பெறவில்லை மற்றும் தகுதிகாண் பருவம் முடிக்கவில்லை |
| 24 | சி.மணிவண்ணன் | 17 (b) குற்றச்சாட்டு நிலுவை |
| 25 | கே.கணேசன் | தண்டனை நடப்பில் உள்ளது, துறைத் தேர்வு மற்றும் தகுதிகாண் பருவம் முடிக்கவில்லை |
| 26 | எம்.கோவிந்தன் | 17 (b) குற்றச்சாட்டு நிலுவை |
| 27 | எஸ்.ஆர்.ஜீவா | தண்டனை நடப்பில் உள்ளது |

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மை செயலாளருக்காக.

நகல்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள்